தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI

காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 39 | 4 Pages | 8.9.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 39 | 4 பக்கங்கள் | 8.9.2024 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825




**கொல்லான் லை மறுத்தானைக் கைகூப்பி**
**எல்லா உயிருந் தொழும்**

**விளக்கம்:**

**ஒருயிரையும் கொல்லாமல் புலால் உண்ணாமல் வாழ்கின்றவனை உலகத்தில் உள்ள எல்லா உயிர்களும் கைகூப்பி வணங்கும்.**

## உக்ரைனுடன் பேச்சுவார்த்தை நடத்த தயார்: புதின் அறிவிப்பு



மாஸ்கோ, செப். 8

ரஷியா உக்ரைன் இடையே கடந்த 2022ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் போர் தொடங்கியது. உக்ரைனுக்கு ஆதரவாகஅமெரிக்காஇருந்து வருவதால் இந்த போர் 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இதனால், சர்வதேச அளவிலும் பல்வேறு பொருளதார நெருக்கடி நிலவுகிறது. ரஷியா உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டு வர வேண்டும் என்று பல்வேறு நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில், உக்ரைனுடன் பேச்சுவார்த்தைக்கு தயார் என்று புதின்அறிவித்துள்ளார். இது தொடர்பாக புதின்கூறுகையில், இந்தியா, சீனா, பிரேசில் போன்ற நம்பிக்கைக்கு உரிய நட்பு நாடுகளுக்கு ரஷியா மதிப்பளிக்கிறது. உக்ரைன் போர் தொடர்பாக இந்த நாடுகளுடன் தொடர்ந்து தொடர்பு கொண்டுள்ளேன். பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண உக்ரைன் விரும்பினால் நான் தயாராக இருக்கிறேன். இதற்கு, இந்தியா, சீனா, பிரேசில் நாடுகள் மத்தியஸ்தம் செய்ய வேண்டும்" என்று கூறினார்.

## பள்ளி விடுதியில் பயங்கர தீ விபத்து: 17 மாணவர்கள் உடல் கருகி பலி





நைரோபி, செப். 8

கிழக்கு ஆப்பிரிக்காவில் அமைந்துள்ள நாடு கென்யா. இந்நாட்டின் நெய்ரி நகரில் ஹில்சைட் எண்டர்சா என்ற பள்ளிக்கூடம் உள்ளது. இந்த பள்ளிக்கூடத்தில் நூற்றுக்கணக்கான மாணவமாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியில் தங்கிப்படிக்கும் வகையில் மாணவர் விடுதியுள்ளது. இதில் பல மாணவர்கள் தங்கி கல்வி பயின்று வருகின்றனர்.

இந்நிலையில், பள்ளியில் உள்ள மாணவர்கள் தங்கும் விடுதியில் நேற்று இரவு பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இந்த கோர விபத்தில் 17 மாணவர்கள்தீயில்உடல்கருகிஉயிரிழந்தனர். மேலும், 13மாணவர்கள் பலத்த தீக்காயம் அடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், தீயணைப்புத்துறையினர் பள்ளி விடுதியில் பற்றி எரிந்த தீயை அணைத்து காயமடைந்த மாணவர்களை மீட்டனர். மீட்கப்பட்ட மாணவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டனர். மேலும், தீ விபத்துக்கான காரணம் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## ஜெர்மனியில் இஸ்ரேல் தூதரகம் அருகே துப்பாக்கி சூடு

பெர்லின், செப். 8

ஜெர்மனியின் முனிச் நகரில் உள்ள அருங்காட்சியகம் அருகே இ`ஸ்ரேல் தூதரகம் செயல்படுகிறது. தன் அருகே துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களுடன் ஒருவர் சுற்றித்திரிந்தார். எனவே சந்தேகத்தின்பேரில் போலீசார் அவரை தடுத்து நிறுத்தி விசாரணை நடத்த முயன்றனர். அப்போது அவர் போலீசாரை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினார்.

இதற்கு பதிலடியாக போலீசார் அவரை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் அந்த நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதனையடுத்து பாதுகாப்பு கருதி அங்கு ஏராளமான போலீசார் குவிக்கப்பட்டனர்.

இது குறித்து காவல்துறை அதிகாரிகள் கூறியதாவது:

முனிச்நகரிலுள்ளஇஸ்ரேல்துணைத்தூதரகம்அருகேதுப்பாக்கியுடன் வந்த 18 வயது இளைஞா`போலீசாரை நோக்கி சுட்டா`. அதையடுத்து, போலீஸா` திருப்பிச் சுட்டதில் அவா` உயிரிழந்தா`.

1972 மியூனிக் ஒலிம்பிக் போட்டியின்போது இஸ்ரேல் விளையாட்டு வீரா`களும் பாலஸ்தீன ஆயுதக் குழுவினரும் சுட்டுக் கொல்லப்பட்ட 52ஆவது ஆண்டு தினத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. எனவே, இஸ்ரேல் துணைத் தூதரகத்தில் தாக்குதல் நடத்தும் நோக்கில் அந்த இளைஞா` துப்பாக்கியுடன் அங்கு வந்திருக்கலாம் என்று அதிகாரிகள் கூறினா`.

இது குறித்து செய்தியாளா`களிடம் உள்துறை மந்திரி ஜோவாசிம் ஹொமன் கூறுகையில், 'இஸ்ரேல் துணைத் தூதரகம் அருகே ஒருவா` காரை நிறுத்துகிறா`; பிறகு துப்பாக்கியால் சுடுகிறா` என்றால் அது வெறும் தற்செயலான நிகழ்வாக இருக்க முடியாது' என்றா`.

# மீனவர் விவகாரம் வெளியுறவுத்துறை மந்திரிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை,செப். 8


தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைதுசெய்வதும், அவர்களின் படகுகளை பறிமுதல் செய்வதோடு, மீனவர்களுக்கு இலங்கை கோர்ட்டு அபராதம் விதிப்பதும் வாடிக்கையாகி வருகிறது. இன்றும் 3 மீனவர்களுக்கு 6 மாதம்சிறைதண்டனைவிதித்துள்ள இலங்கை நீதிமன்றம், 8 மீனவர்களுக்கு இலங்கை மதிப்பில் தலா ரூ.50 ஆயிரம் அபராதம் விதித்துள்ளது. முன்னதாக தூத்துக்குடி மீனவர்கள் 12 பேருக்கு ரூ.3.5 கோடி அபராதம் விதித்து இருந்தது. தொடர்ந்து அத்துமீறும் இலங்கை கடற்படையின் நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என பல்வேறு கட்சிகள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இந்த நிலையில், தமிழக மீனவர்கள் விவகாரம் தொடர்பாக மத்திய மந்திரி ஜெய்சங்கருக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்த கடிதத்தில் அவர் கூறி இருப்பதாவது;

தமிழ்நாட்டு மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகளில் மீன் பிடித்துக் கொண்டிருக்கும்போது அடிக்கடி கைது செய்யப்படுவது அவர்களது வாழ்வாதாரத்தை மிகவும் பாதிக்கிறது.

தமிழ்நாட்டின் புதுக்கோட்டையைச்சேர்ந்த 4 மீனவர்களை அவர்களது மீன்பிடிப் படகுடன் (பதிவு எண்.INDTN08 MM1418) இலங்கைக் கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

இந்தப் பாரம்பரிய மீன்பிடிப் பகுதிகள் தமிழ்நாட்டு மீனவர்களுக்கு பல தலைமுறைகளாக வாழ்வாதாரமாக திகழ்கிறது. மீனவர்கள் அடிக்கடி கைது செய்யப்படுவதும் படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் தமிழ்நாட்டு மீனவர் சமூகத்தினருக்கு மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், 21072024 அன்று IND TN12MM5900 என்ற பதிவெண் கொண்ட படகில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது கைது செய்யப்பட்ட12தமிழ்நாட்டுமீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றம் 03092024 அன்று 1.5 கோடி ரூபாய் அபராதம் விதித்தது. இது ஏற்கனவே துயரத்தில் உள்ள மீனவ குடும்பங்களை மிகவும் வேதனைக்குள்ளாக்குவதுடன் அவர்களுக்கு மிகப்பெரிய இழப்பையும் ஏற்படுத்தும்.



எனவே, இலங்கை வசம் உள்ள மீன்பிடிப் படகுகளை விடுவித்திடவும், மீனவர்களைதாயகத்திற்குத் திரும்பி அழைத்து வரவும், மீனவர்கள் மீது விதிக்கப்பட்ட அபராதத் தொகையினை மனிதாபிமான அடிப்படையில் தள்ளுபடி செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு வெளியுறவுத் துறை மந்திரி ஜெய்சங்கரை வலியுறுத்துகிறேன்."

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, பரனூர் கிராமத்தில், 65 பயனாளிகளுக்கு ரூ.19.30 இலட்சம் மதிப்பீட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், 11 பயனாளிகளுக்கு ரூ.38.92 இலட்சம் மதிப்பீட்டில் கான்கிரிட் வீடுகள் கட்டுவதற்கான ஆணை

விழுப்புரம், செப். 8

உயர்கல்வித்துறை அமைச்சர் க.பொன்முடி, மாவட்ட சி.பழனி தலைமையில், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் அ.சிவா முன்னிலையில் விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம், பரனூர் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில், பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், கான்கிரிட் வீடுகள் கட்டுவதற்கான ஆணையினை வழங்கினார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில், தமிழ்நாடு முதலமைச்சர், அனைத்து தரப்பு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பல்வேறு சிறப்புத்திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில், தமிழ்நாட்டில் குடிசைகள் இல்லா நிலையினை உருவாக்க வேண்டும், என்ற உயர்ந்த எண்ணத்தில் இலவச வீட்டுமனைப்பட்டா, கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், கான்கிரிட் குடியிருப்பு வீடுகள் திட்டத்தினை செயல்படுத்தி, கிராமப்புற மக்களின் கான்கிரிட் வீடு கட்டும் கனவினை நிறைவேற்றி க்கொடுத்து வருகிறார்கள்

அதனடிப்படையில், இன்றைய தினம், கண்டாச்சிபுரம் வட்டம், பரனூர் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில், 65 பயனாளிகளுக்கு ரூ.19,30,000/ மதிப்பிலான இலவச வீட்டுமனைப்பட்டாக்கள் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை சார்பில், கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின் கீழ், தலா ரூ.3,53,900/ வீதம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 11 பயனாளிகளு க்கு ரூ.38,92,900/ மதிப்பீட்டில் கான்கிரிட் வீடுகள் கட்டுவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர், அடித்தட்டு மக்கள் சமுதாயத்தில் சமநிலைக்கு வரவேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில்தான் இலவச வீட்டுமனைப்பட்டா, கான்கிரிட் வீடுகள் வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள் இதுமட்டுமல்லாமல், கிராமப்புற மகளிர்கள் மற்றும் குடும்பத்தலைவிகள் தங்களுடைய அடிப்படை தேவைகளை தாங்களே நிறைவேற்றிக்கொள்ளும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ், மாதந்தோறும் ரூ. 1,000/ உரிமைத்தொகையினை வழங்கி வருகிறார்கள். மேலும், விடியல் பயணம் திட்டத்தின்கீழ், கட்டணமில்லா பேருந்து பயண சேவையினையும் ஏற்படுத்திக்கொடுத்துள்ளார்கள். கிராமப்புற மாணவியர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வி பயிலும் வகையில் புதுமைப்பெண் திட்டம், மாணவர்கள் இடைநிற்றல் இல்லாமல் உயர்கல்வி பயிலும் வகையில் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின்கீழ், மாதந்தோறும் ரூ 1,000/ ஊக்கத்தொகையினை வழங்கி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் பெற வேண்டும் என்றால் மகளிர்கள் அனைவரும் முன்னேற்றம் காண வேண்டும் அந்த அடிப்படையில்தான் உள்ளாட்சி அமைப்புகளில் மகளிருக்கு 50 சதவீத இடஒதுக்கீட்டினை அறிவித்தார்கள். இதன் மூலம், பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகளில் மகளிர்கள் ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர்கள், ஊராட்சி மன்றதலைவர்களாகவும் உள்ளனர்ந கர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் வேலைக்கு செல்லும் மகளிரின் நலனை கருத்திற்கொண்டு, அவர்களின் பிள்ளைகள் ஆரோக்கியமான அடிப்படை கல்வியினை பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் முதலமைச்சரின் காலை உணவு வழங்கும் திட்டத்தின்கீழ், அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் சிறப்புத் திட்டமான மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ், அரசு அலுவலர்கள் மக்களைத்தேடிச் சென்று கோரிக்கை மனுக்களை பெறும் நிலையினை உருவாக்கி கொடுத்துள்ளார்கள். மக்களுடன் முதல்வர் திட்டத்தில் பெறப்படும் கோரிக்கை மனுக்கள் 30 நாட்களுக்குள் உடனடி தீர்வு காணப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும்.



மாணவர்கள் கல்விப்படிப்பு மட்டுமல்லாமல் விளையாட்டுப்போட்டிகளிலும் கவனம்செலுத்திட வேண்டும். விளையாட்டு தங்கள் மனநிலையினை ஒருநிலைப் படுத்தும்இ தனால் தங்களின் கல்வி படிப்பும் நன்றாக அமைந்திடும். தற்பொழுது, தமிழ்நாட்டிலிருந்து 04 நபர்கள் பாரா ஒலிம்பிக் போட்டியில் வெற்றிபெற்றதை தொடர்ந்து, மாண்புமிகு இளைஞர்நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களை நேரில்ச ந்தித்து வாழ்த்து பெற்றுள்ளனர் தமிழ்நாடு முதலமைச்சர், தமிழ்நாட்டில் உள்ள படித்த இளைஞர்கள் அனைவருக்கும் வேலைவா ய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்திட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அமெரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பல்வேறு பன்னாட்டு தொழில்நிறுவனங்கள் தமி ழ்நாட்டில் தொழில் துவங்குவதற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டு வருகிறார்கள்.

தமிழ்நாடு முதலமைச்சர் செயல்படுத்தும் பல்வேறு வரலாற்று சிறப்புமிக்கத் திட்டங்கள் மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கான திட்டம் என்பதால்தான் மற்ற மாநிலங்கள் தமிழ்நாட்டினை திட்டங்களை பின்பற்றும் நிலை உருவாகி வருகிறது. எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசின் திட்டங்களை நல்ல முறையில் பயன்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என உயர்க்வித்துறை அமைச்சர் க.பொன்முடி தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ஜெயச்சந்திரன், முகையூர் ஊராட்சி ஒன்றிய குழுத் தலைவர் தனலட்சுமி உமேஷ்வரன், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் தமிழரசன், வருவாய் வட்டாட்சியர் கிருஷ்ணதாஸ், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் ராஜீவ் காந்தி,ரவிச்சந்திரன், பிரபு, ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் பூபாலன், பரனூர் ஊராட்சி மன்ற தலைவர் பழனியம்மாள், ராஜேஷ், லோகநாதன், விஜயராகன், உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## சிவகங்கை மாவட்ட அரசு பள்ளி ஆசிரியருக்கு அன்பாசிரியர் விருது வழங்கிய கௌரவித்த தமிழக அரசு

சிவகங்கை:செப் 08

சிவகங்கை மாவட்டத்தில் பணிபுரிந்து வரும் அரசுபள்ளி ஆசிரியர்க்கு தமிழக அரசு அன்பாசிரியர் விருது வழங்கி கௌரவத்து ஆசிரியரை பாராட்டியுள்ளது.

தமிழக அரசின் மூலம் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அன்பாசிரியர் விருதினை பெற தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் இருந்து 600க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் விண்ண ப்பித்து இருந்த நிலையில் பேராசிரியர்கள் மூத்த கல்வியாளர்களை கொண்டு அன்பாசிரியர் விருது தேர்வு செய்யப்பட்டது,பள்ளி கல்வித்துறை மூலம் 148பேர் நேர்காணலுக்கு அழைப்பட்டு,இணையம் வழி நேர்காணல் நடத்தப்பட்டது இந்த நேர்காணலில் சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் கீழக்கோட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலை பள்ளி அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ஆரோக்கியசாமி அன்பாசிரியராக தேர்வு செய்யப்பட்டார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆசிரியர் ஆரோக்கியசாமிக்கு அன்பாசிரியர் விருதுநினை வழங்கி கௌரவித்தார் கடந்த 29 ஆண்டுகளாக ஆசிரியர் பணியில் பணியாற்றி வரும் ஆசிரியர் பாடம் கற்பிப்பதோடு நின்று விடாமல் மாறுபட்ட சிந்தனை சமூக அக்கறை நற்பண்புகளை போதித்துவந்ததன்தொடர்ச்சியாக அன்பாசிரியர் விருதினை பெற்றுள்ளார்,ஆசிரியர் ஆரோக்கியசாமி அவர்களை சிவகங்கை மாவட்ட ஆசிரியர்கள் கல்வியாளர்கள் சமூக ஆர்வலர்கள் மற்றும் மாணவர்கள் பாராட்டி வருகின்றனர்..



## பள்ளி மாணவர்கள் சென்ற வாகனத்தை மறித்த ஒற்றை யானை: காட்டுக்குள் ஓடி உயிர் தப்பினர்

திருப்பத்தூர், செப். 8

திருவண்ணாமலை மாவட்டம், ஜவ்வாது மலையில் உள்ள ஜமுனா மரத்தூர் பகுதியில் நடந்த பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக தமிழக கவர்னர் ஆர்.என். ரவி நேற்று ஜவ்வாதுமலைக்கு வந்தார். இன்று அவர் ஜமுனாமரத்தூர் அடுத்த குனிகாந்தூர் பகுதியில் உள்ளஜவ்வாது மலைவாழ் மக்கள் மேல்நிலைப் பள்ளி நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இதற்காக அந்த பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சிலர் நேற்று மாலை கவர்னருக்கு வரவேற்பு அளிப்பதற்காக தங்களது பெற்றோர்களுடன் சென்றனர். பின்னர் அங்கிருந்து மீண்டும் சொந்த கிராமமான ஜவ்வாது மலைகளில் உள்ள புதூர் நாடு, வசந்தபுரம் பகுதிக்கு ஜீப்பில் திரும்பி வந்து கொண்டிருந்தனர். ஜீப்புக்கு முன்னால் மாணவர்களின் பெற்றோர் சிலர் 2 பைக்குகளில் சென்றனர். இந்த நிலையில் திருப்பத்தூர் மாவட்டம், காவலூர் அடுத்த வசந்தபுரம் பகுதியில் ஜீப் சென்று கொண்டிருந்தபோது, திடீரென ஒற்றை காட்டு யானை மாணவர்கள் சென்ற வாகனத்தை வழிமறித்து நிறுத்தியது. காட்டு யானையை பார்த்ததும் மாணவர்கள் வாகனத்தில் இருந்து இறங்கி, அலறி அடித்துக்கொண்டு காட்டுப் பகுதிக்குள் தப்பித்து ஓடினர். பைக்கில் வந்தவர்களும் காட்டுப் பகுதிக்குள் ஓடினர்.

இதையடுத்து அந்த யானை அவர்கள் வந்த பைக்குகளை மிதித்து சேதப்படுத்தியது. பின்னர் மாணவர்கள் வந்த ஜீப்பையும் கவிழ்த்து ஒரு பள்ளத்தில் தள்ளியது. இதுகுறித்து தகவலறிந்த போலீசார் மற்றும் வனத்துறை அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். காட்டுப்பகுதியில் இருந்த 22 மாணவர்களையும் பத்திரமாக மீட்டு அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர். இந்த சம்பவம் அந்த பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## சென்னை: குப்பைத்தொட்டியில் வீசப்பட்ட பெண் குழந்தை அதிர்ச்சி சம்பவம்



சென்னை, செப் 8

சென்னை நந்தனம் சிஐடி நகர் 4வது பிரதான சாலையில் உள்ள குப்பைத்தொட்டியில் நேற்று இரவு 9 மணியளவில் குழந்தை அழும் சத்தம் கேட்டது. இதனால்அதிர்ச்சியடைந்த அருகில் இருந்த மெக்கானிக் கடை உரிமையாளர் குப்பைத்தொட்டி அருகே சென்று பார்த்துள்ளார்.

அப்போது குப்பைத்தொட்டியில் பிறந்துசில நாட்களேஆன பச்சிளம் பெண் குழந்தை கிடந்துள்ளது. இதுகுறித்து போலீசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டது. தகவலறிந்து விரைந்து வந்த போலீசார் பச்சிளம் குழந்தையை மீட்டு மருத்துவமனையில் அனுமதித்தனர். பின்னர், குழந்தையை காப்பகத்தில் சேர்ந்தனர்.

இச்சம்பவம் தொடர்பாகவழக்குப்பதிவுசெய்த போலீசார் சிசிடிவி காட்சிகளை கைப்பற்றி போலீசார் விசாரணையை தொடங்கினர். அதில் வயதான பெண்ணுடன் ஒரு இளம்பெண் வந்து கைக்குழந்தையை குப்பைத்தொட்டியில் வீசிவிட்டு சென்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன.

அதன் அடிப்படையில் பச்சிளம் குழந்தையை குப்பைத்தொட்டியில் வீசிச் சென்ற இளம்பெண் யார்? என்பது குறித்து விசாரித்து வருகின்றனர்.

## மூடநம்பிக்கை பேச்சாளரை கைது செய்ய வேண்டும் ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை, செப். 8

பாமக நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

சென்னை அசோக்நகரில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் மாணவிகளுக்கு தன்னம்பிக்கையூட்டும் நிகழ்ச்சி என்ற பெயரில் ஒரு பேச்சாளரை அழைத்து வந்து பேச வைத்துள்ளனர். அவர் தன்னம்பிக்கையை வளர்ப்பதற்கு பதிலாக மூட நம்பிக்கையை விதைத்துள்ளார். அவர் பேசிய கருத்துகள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவை. மாணவிகள் அழகாக இல்லாததற்கு கடந்த பிறவிகளில் செய்த பாவம் தான் காரணம் என்று அந்த பேச்சாளர் பேசியுள்ளார். கல்வியை விதைக்க வேண்டிய பள்ளிகள் மூட நம்பிக்கையை விதைப்பவர்களின் வேட்டைக்காடாக மாற்ற பள்ளிக்கல்வித்துறை முயல்வது கண்டிக்கத்தக்கது.

அசோக்நகர் பள்ளியில் நடந்த நிகழ்வுக்கு பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே காரணமாக இருக்க முடியாது. வழக்கமாக பள்ளிக்கு ஆண்டு விழா நடத்துவதற்கே சில ஆயிரம் ரூபாய் மட்டும் தான் செலவிடப்படும். ஆனால், மூடநம்பிக்கை பேச்சாளரின் நிகழ்ச்சிக்கு தாராளமாக செலவிடப்பட்டுள்ளது. தம்மை மகாவிஷ்ணு என்று கூறிக்கொண்ட அந்த நபருக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டிருக்கிறது. அந்த நபரின் மூட நம்பிக்கை பேச்சுகளை கண்டித்த ஆசிரியரை அந்த நபர் கடுமையாக விமர்சித்திருக்கிறார்; அதை எவரும் எதிர்த்து கேள்வி கேட்கவில்லை. மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியைவிட ஆசிரியர்கள் பெரியவர்களா? என்று அந்த நபர் வினா எழுப்பியுள்ளார். அந்த அளவுக்கு அவருக்கு தைரியத்தைக் கொடுத்தவர்கள் யார்?

அரசு பள்ளிகளின் மாணவ, மாணவியர் தீய பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தடுக்க நீதிபோதனை வகுப்புகளை நடத்துங்கள் என்று பா.ம.க பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது. ஆனால், அதை செய்யாத மாணவ, மாணவிகளின் மனதில் நஞ்சைக் கலக்கும் மனிதர்களை அழைத்து வந்து இத்தகைய நிகழ்ச்சிகளை நடத்துவது கண்டிக்கத்தக்கது. இத்தகைய நிகழ்ச்சிகள் இனியும் நடப்பதை அனுமதிக்கக்கூடாது.

சென்னை அசோக்நகர் பள்ளியில் நடந்த நிகழ்வுகளுக்கு காரணம் என்று சில ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுத்து விட்டு இந்த சிக்கலை மூடி மறைத்து விடக் கூடாது. இந்த நிகழ்ச்சிக்கு காரணமானவர்கள் பள்ளிக்கல்வித்துறையின் எத்தகைய உயர்பொறுப்பில் இருந்தாலும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். மாணவிகளின் சிந்தனையை மழுங்கடித்த அந்த மூட நம்பிக்கைப் பேச்சாளர் கைது செய்யப்பட வேண்டும் என்றுவலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## அரசு பள்ளி நிகழ்ச்சியில் சர்ச்சை பேச்சு: பள்ளிக் கல்வித்துறை விசாரணை



சென்னை, செப். 8

சென்னை அசோக் நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. அந்த சொற்பொழிவில் மகா விஷ்ணு என்பவர் பாவ புண்ணியம், மறுபிறவி என சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார்.

மேலும் முன்ஜென்ம தவறுகளால் மாற்றுத்திறனாளியாக பிறக்கிறார்கள் என பேசிய மகா விஷ்ணுவின் பேச்சை பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆசிரியர் கண்டித்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவித்து ஆசிரியரை மகா விஷ்ணு மரியாதை குறைவாக பேசியுள்ளார். மகா விஷ்ணு பேசிய வீடியோ இணையத்தில் வைரலான நிலையில் அவருக்கு பலரும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், அரசு பள்ளியில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தியது தொடர்பாக அப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறையின் விசாரணைக் குழு நேரில் சென்று விசாரணை நடத்த உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் இந்த விவகாரம் குறித்து விளக்கம் அளிக்கவும் பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

## பத்திரப்பதிவு அலுவலகங்களில் கூடுதல் டோக்கன்கள் ஒதுக்கீடு

சென்னை, செப். 8

தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"சுபமுகூர்த்த தினங்கள் என கருதப்படும் நாட்களில் அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் என்பதால் அன்றைய தினங்களில் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ஆவணப்பதிவுக்காக கூடுதல் முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தற்போது ஆவணி மாதத்தின் சுபமுகூர்த்த தினமான 6.9.2024 அன்று அதிகளவில் பத்திரப் பதிவுகள் நிகழும் என்பதால் கூடுதலாக முன்பதிவு டோக்கன்கள் ஒதுக்கீடு செய்யுமாறு பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் பெறப்பட்டுள்ளன.

எனவே, ஆவணி மாதத்தின்சுபமுகூர்த்ததினமான 6.9.2024 அன்று ஒரு சார்பதிவாளர் உள்ள அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 முன்பதிவு டோக்கன்களும், இரண்டு சார்பதிவாளர்கள் உள்ள அலுவலகங்களுக்கு 200க்கு பதிலாக 300 முன்பதிவு டோக்கன்களும், அதிகளவில் ஆவணப் பதிவுகள் நடைபெறும் 100 அலுவலகங்களுக்கு 100க்கு பதிலாக 150 சாதாரண முன்பதிவு டோக்கன்களோடு ஏற்கெனவே வழங்கப்படும் 12 தட்கல் முன்பதிவு டோக்கன்களோடு கூடுதலாக 4 தட்கல் முன்பதிவு டோக்கன்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்கிட உத்தரவிடப்பட்டுள்ளது." இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிதம்பரம் நடராஜர் கோவில்: வரவு, செலவு கணக்கு விவரங்களை தாக்கல் செய்ய தீட்சிதர்களுக்கு ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, செப். 8

சிதம்பரம் நடராஜர் கோவில் 2008 ம் ஆண்டு முதல் 2014 ம் ஆண்டு வரையில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் இருந்த போது 3 கோடி ரூபாய்க்கு மேல் வருவாய் ஈட்டிய நிலையில் தீட்சிதர்கள் கட்டுப்பாட்டுக்கு வந்த பிறகு ஆண்டுக்கு 2 லட்சம் ரூபாய் மட்டுமே வருமானம் வருவதால் கோவிலில் வருவாய் கணக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்ற கோரிக்கையுடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர்சென்னைஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்து இருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சுரேஷ்குமார் மற்றும் சவுந்தர் அடங்கிய சிறப்பு அமர்வில் விசாரணைக்கு வந்த போது, இந்து சமய அறநிலையத்துறை தரப்பில், கோவில் நிர்வாகம் தீட்சிதர்கள் வசம் ஒப்படைக்கப்பட்ட பின் பக்தர்கள் செலுத்தும் காணிக்கையை கோவிலின் கணக்கில் செலுத்தாமல் தீட்சிதர்கள் எடுத்துச் செல்வதாக குற்றம் சாட்டப்பட்டது.

தீட்சிதர்களின் தவறான நிர்வாகம் காரணமாக கோவிலின் வருமானம் பெருமளவு குறைந்து விட்டதால் தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் உள்ள காலத்தில் வந்த வருமான குறித்த கணக்கை தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

பொது தீட்சிதர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் கோவில் இருந்தபோது, பக்தர்கள் காணிக்கை செலுத்த உண்டியல் வைக்கப்பட்டிருந்தது. பூஜைகள், அர்ச்சனை, தரிசனத்துக்கு டிக்கெட் அடித்து கட்டணம் வசூலிக்கப்பட்டது. அதன் காரணமாகவே அதிக வருவாய் கிடைத்தது என்று தெரிவித்தார். கோவில் தீட்சிதர்கள் கட்டுப்பாட்டுக்கு வந்த பிறகு உண்டியல் அகற்றப்பட்டுவிட்டது. பூஜை, அர்ச்சனை மற்றும் தரிசனத்திற்கு எந்த கட்டணமும் வசூலிக்கப்படுவதில்லை என்று குறிப்பிட்டார். மேலும் பக்தர்கள் செலுத்தும் காணிக்கையை தீட்சிதர்கள் எடுத்துச் செல்வதாக கூறப்படும் குற்றச்சாட்டுகள் குறித்து கூடுதல் பதில் மனு தாக்கல் செய்ய அவகாசம் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், சிதம்பரம் கோவில் பராமரிப்பு மற்றும் பக்தர்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க என்ன வருவாய் ஆதாரம் உள்ளது என்று கேள்வி எழுப்பினர். மேலும் கோவில் காணிக்கை தவிர தீட்சிதர்களுக்கு வேறு வருவாய் ஆதாரங்கள் உள்ளதா என கேள்வி எழுப்பிய நீதிபதிகள், சிதம்பரம் நடராஜர் கோவிலில் உண்டியல் எப்போது அகற்றப்பட்டது? பூஜை அர்ச்சனை தரிசனத்திற்கு கட்டணங்கள் வசூலிக்கப்படுவது இல்லையா என்பது குறித்து மனுவாக தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

மேலும் ஒவ்வொரு ஆண்டும் தீட்சிதர்கள் தரப்பில் வருமான வரி கணக்கு தாக்கல் செய்யப்படுகிறதா என்பது குறித்தும் தெரிவிக்க உத்தரவிட்ட நீதிபதிகள், தீட்சிதர்கள் கட்டுப்பாட்டுக்கு வந்த பிறகு 2014 2015 முதல் 202324 ம் ஆண்டுகள் வரையிலான வருமானம் செலவு குறித்த கணக்கு புத்தகங்களை வரும் 19ம் தேதி தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டு, விசாரணையை ஒத்தி வைத்தனர்.

## தொடக்கப்பள்ளி சமையல் கூட கதவில் மனிதக்கழிவு: கைதானவர் போலீசாரிடம் வாக்குமூலம்




நாமக்கல், செப். 8

நாமக்கல் மாவட்டம் எருமபட்டியில் கடந்த 2ந்தேதி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி சமையல் கூட கதவில் மனிதக்கழிவை பூசப்பட்டிருந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய போலீசார், எருமபட்டியைச் சேர்ந்த துரைமுருகன்என்பவரை கைது செய்தனர்.

இந்த நிலையில் சத்துணவு மைய சமையலர், உதவியாளருடன் முன்விரோதம் இருந்ததால், சத்துணவு மைய கதவில் மனித கழிவை பூசியதாக போலீசாரிடம் துரைமுருகன் வாக்குமூலம் அளித்துள்ளார். தொடர்ந்து இந்த வழக்கு குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## தஞ்சை: லிப்ட் கொடுப்பதாக கூறி பெண் பாலியல் பலாத்காரம்; 2 பேர் கைது

தஞ்சை, செப். 8

தஞ்சையில் 45 வயது பெண், திருமணமானவர். இவர் தனது மகள் வீட்டிற்கு கடந்த 3ம் தேதி இரவு வருவதற்காக பஸ்சுக்காக காத்திருந்துள்ளார். அப்பொழுது அந்த வழியாக சென்ற பிரவீன் (32), ராஜ்கபூர் (25) இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்துள்ளனர்.

பஸ்சுக்காக காத்திருந்த 45 வயது பெண்ணிடம் நைசாக பேச்சு கொடுத்தனர். அப்போது பஸ் வர தாமதமாகும் என கூறி உள்ளனர். தொடர்ந்து தாங்கள் அந்த ஊரை தாண்டித்தான் செல்கிறோம் என போகிற வழியில் இறக்கி விடுவதாக கூறினர்.

லிப்ட் கொடுப்பதாக கூறி ஒரு இருசக்கர வாகனத்தில் அப்பெண்ணை அழைத்துக்கொண்டு சென்றுள்ளனர். அவர்களின் பேச்சை கேட்டு அந்த பெண்ணும் சென்றுள்ளார்.

அவர்களின் பின்னால் ராஜ்கபூர் வந்துள்ளார்.

அப்போது, அந்த பெண் செல்ல வேண்டிய ஊரைத் தாண்டியதும், பிரவீன் மற்றும் ராஜ்கபூர் இருவரும் சேர்ந்து ஆள் நடமாட்டம் இல்லாத வயல் பகுதிக்கு அப்பெண்ணை வலுக்கட்டாயமாக அழைத்து சென்றுள்ளனர். இதையடுத்து அப்பெண் கூச்சலிட்டுள்ளார்.

அவரை தாக்கி விட்டு, பிரவீன், ராஜ்கபூர் இருவரும் வலுக்கட்டாயமாக பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். இந்நிலையில், வீட்டிற்கு வருவதாக கூறி, தனது அம்மா வெகு நேரமாகியும் வரவில்லை என்பதால், 45 வயது பெண்ணின் மகள் தனது தம்பியை விட்டு தேடிவர கூறியுள்ளார். அவர் தேடி வரும் போது வழியில் அம்மா அழுதுகொண்டு இருப்பதை பார்த்து மகன் அதிர்ச்சி அடைந்தார்.

அந்த பெண்ணின் மகன் வருவதை பார்த்து பிரவீன், ராஜ்கபூர் இருவரும் சம்பவ இடத்தில் இருந்து தப்பியோடியுள்ளனர். அவர்களை பிடிக்க முயன்ற போது அவர்கள் இருசக்கர வாகனத்தில் ஏறி தப்பி ஓடி விட்டனர். இது குறித்து அந்த பெண் அளித்த புகாரின் பேரில், போலீசார் வழக்கு பதிவு செய்து,

பிரவீன், ராஜ்கபூர் இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கிருஷ்ணகிரியில் மேலும் ஒரு என்.சி.சி. பயிற்சியாளர் கைது



கிருஷ்ணகிரி, செப். 8

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அருகே கந்திகுப்பத்தில் உள்ள தனியார் பள்ளியில் நடந்த போலி என்.சி.சி. முகாமில் கலந்து கொண்ட 13 வயதுடைய 8ம் வகுப்பு மாணவியை போலி பயிற்சியாளர் சிவராமன் என்பவர் பாலியல் பலாத்காரம் செய்தார். மேலும், 13 மாணவிகள் பாலியல் தொந்தரவுக்கு உள்ளானார்கள்.

இந்த சம்பவம் தொடர்பாக சிவராமன் மற்றும் சம்பவத்தை மறைத்த பள்ளி தாளாளர், முதல்வர் உள்பட மொத்தம் 13 பேர் பர்கூர் அனைத்து மகளிர் போலீசாரால் கைது செய்யப்பட்டனர். இதற்கிடையே கைது நடவடிக்கை முன்பு, விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்ற சிவராமன், சிகிச்சை பலனின்றி கடந்த மாதம் 23ந் தேதி உயிரிழந்தார்.

பள்ளி மாணவிகள் பாலியல் துன்புறுத்தல் சம்பவம் குறித்து, தமிழக முதல் அமைச்சர் உத்தரவின் பேரில் ஐ.ஜி. பவானீஸ்வரி தலைமையிலான சிறப்பு புலனாய்வு குழுவும், சமூக நலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமையிலான பல்நோக்கு குழுவினரும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதில் வேறு ஒரு தனியார் பள்ளியில் சிவராமனால் நடத்தப்பட்ட போலி முகாமில் கலந்து கொண்ட 14 வயது மாணவியும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டது தெரிந்தது. தொடர்ந்து அப்பள்ளியின் பெண் முதல்வர் கைது செய்யப்பட்டார்.

இந்தநிலையில், சிவராமனால் நடத்தப்பட்ட போலி முகாம்கள் குறித்த தகவல்களை மறைத்ததாக, காவேரிப்பட்டணம் சந்தைபாளையம் பகுதியைச் சேர்ந்த என்.சி.சி. பயிற்சியாளர் கோபு (வயது 47) என்பவரை சிறப்பு புலனாய்வு பிரிவு போலீசார் நேற்று கைது செய்தனர்.

இதுகுறித்து போலீசார் கூறும்போது, சிவராமன் நடத்திய போலி முகாம்கள் குறித்து தெரிந்தும், கோபு (வயது 47)அவருக்கு உறுதுணையாக இருந்துள்ளார். குறிப்பாக சில தனியார் பள்ளிகளில் நடந்த போலி முகாம்களில் கோபுவும் கலந்து கொண்டது தெரிய வந்தது என்றனர்.

## முதல்முறையாக சிறை செல்வோருக்கு தனி சிறை: ஐகோர்ட் மதுரை கிளை



மதுரை, செப். 8

ஐகோர்ட்டு மதுரை கிளை அமர்வில் ஜாமீன் மற்றும் முன்ஜாமீன் கோரும் மனுக்களை நீதிபதி பரத சக்கரவர்த்தி விசாரித்து வருகிறார். இந்நிலையில் இன்று விசாரணை தொடங்கும் முன் மதுரை சரக சிறைத்துறை துணைத் தலைவர் பழனி நேரில் ஆஜரானார்.

அவரிடம் நீதிபதி, "மதுரை மத்திய சிறையில் முதன்முறை சிறைக்கு வருபவர்கள் தனியாக வைக்கப்படுகிறார்களா..?" என்று கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த சிறைத்துறை துணை தலைவர், "மதுரை மத்திய சிறையை பொறுத்த வரை தண்டனை கைதிகள் தனியாகவும், விசாரணை கைதிகள் தனியாகவும் அடைக்கப்படுகிறார்கள். இந்த நடைமுறையே பின்பற்றப்படுகிறது" என்று கூறினார்.

இதனைத்தொடர்ந்து நீதிபதி கூறுகையில், "கல்லூரி மாணவர்கள், இளைஞர்கள் ஜாமீன் கோரி வந்த சில வழக்குகளை விசாரித்த போது, அவர்கள் சிறிய வழக்குகளில் சிறையில் இருந்தபோது பெரிய குற்றவாளிகளுடன் ஏற்பட்ட தொடர்பில் மீண்டும் குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக தெரிவித்தனர். இது தவிர்க்கப்பட வேண்டும். ஆகவே, குற்றச் செயல்களில் ஈடுபட்டு முதன் முறை சிறைக்குச் செல்வோருக்கு என தனியாக சிறைகளை அமைப்பது குறித்து முடிவு செய்ய வேண்டும். இதனால் அவர்கள் பெரும் குற்றவாளிகளாக மாறுவதை தடுக்கலாம். இதுதொடர்பாக உரிய அறிவுறுத்தல்களை நீதிமன்றம் வழங்கும். அதன்பின்னர் அதுதொடர்பாக ஆலோசித்து உரிய நடவடிக்கை எடுங்கள்" என்று அவர் தெரிவித்தார்.

# பள்ளிகளில் தனியார் நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்க கூடாது
## பள்ளிக்கல்வித்துறை அதிரடி




சென்னை, செப். 8

சென்னை அசோக் நகரில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சியில் மகா விஷ்ணு என்பவர்பாவபுண்ணியம், மறுபிறவி என சர்ச்சைக்குரிய வகையில் பேசியுள்ளார். மகா விஷ்ணுவின் பேச்சை பார்வையற்ற மாற்றுத்திறனாளி ஆசிரியர் கண்டித்துள்ளார். இதற்கு மறுப்பு தெரிவித்து ஆசிரியரை மகா விஷ்ணு மரியாதை குறைவாக பேசியுள்ளார்.

இந்த விவகாரம் சர்ச்சையான நிலையில், அரசு பள்ளியில் ஆன்மிக சொற்பொழிவு நிகழ்ச்சி நடத்தியது தொடர்பாக அப்பள்ளியில் பள்ளிக்கல்வித்துறை விசாரணை நடத்தி வருகிறது. மேலும் சம்பந்தப்பட்ட பள்ளி தலைமை ஆசிரியர் இந்த விவகாரம் குறித்து விளக்கம் அளிக்கவும் பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

இந்த சூழலில், அரசு பள்ளிகளில் தனியார் நிகழ்ச்சிகளை நடத்த அனுமதிக்க கூடாது என பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் கண்ணப்பன் அறிவுறுத்தியுள்ளார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலக கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்படி, அரசு பள்ளிகளில் சொற்பொழிவு உட்பட எந்த வகையிலும் வெளியாட்கள் நிகழ்ச்சி நடத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

அரசுப் பள்ளி வளாகத்திற்குள், இனி அரசு சாரா அமைப்புகளின் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்படுகிறது என்றும், மீறினால், பள்ளி தலைமை ஆசிரியருடன், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரும் பணி இடைநீக்கம் செய்யப்படுவார்கள் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசு பள்ளி ஆசிரியர்களே மாணவர்களை ஊக்கப்படுத்தலாம் என்றும், இனி வெளி ஆட்களை அழைத்து வந்து நிகழ்ச்சி நடத்த தடை விதிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# களைகட்டும் விநாயகர் சதுர்த்தி: பாதுகாப்பு பணியில் 64 ஆயிரம் போலீசார்

சென்னை, செப். 8

விநாயகர் சதுர்த்தி விழா இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு, சென்னையில் 1,519 விநாயகர் சிலைகளை வைத்து வழிபட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடுகளை மீறுவோர் மற்றும் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிப்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சென்னை பெருநகர காவல் துறை சார்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு சுமார் 64 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஈரோட்டில் காவல்துறை பாதுகாப்பு ஒத்திகைக்காக நூற்றுக்கும் மேற்பட்ட போலீசார் அணிவகுப்பு பேரணியில் ஈடுபட்டனர்.

விநாயகர் சதுர்த்தி காரணமாக திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை மலர் சந்தையில் பூக்களின் விலை நேற்று கடுமையாக உயர்ந்தது.அதேபோல்தூத்துக்குடி காய்கறி சந்தையில் வாழை இலைகளின் விலை பல மடங்கு உயர்ந்து ஒரு கட்டு 6 ஆயிரத்து 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. சத்தியமங்கலத்தில் சுற்றுச்சூழலை பாதிக்காத வகையில் களிமண்ணால் தயாரிக்கப்பட்ட அழகிய விநாயகர் சிலைகள் 300 ரூபாய் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டன. சேலத்தில் தனியார் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாணவ, மாணவிகள் 30 நிமிடங்களில் களிமண்ணால் ஆன 750 விநாயகர் சிலைகளை செய்து கவனம் ஈர்த்தனர். இதனிடையே விநாயகர் சதுர்த்தி மற்றும் தொடர் விடுமுறையையொட்டி ஏராளமான பொதுமக்கள் சென்னையில் இருந்து தங்கள் சொந்த ஊர்களுக்கு படையெடுத்தனர். இதனால் கோயம்பேடு மதுரவாயல் சாலையில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

விநாயகர் சதுர்த்தி ஊர்வலங்களை பொது அமைதிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நடத்த வேண்டும் எனவும், பொது இடத்தில் வைக்கப்படும் சிலைகளுக்கு வரும் பாதுகாப்பு போடப்படும் எனவும் தமிழ்நாடு காவல்துறை சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.




திருப்பூர் மாவட்டம் ஊத்துக்குளி ஆர் எஸ் பேரூராட்சி அருகில் உள்ள அங்கன்வாடி மையம் சுகாதாரமின்றி கிடக்கும் அவல நிலை அங்கன்வாடியின் சுவர் பழுதடைந்த நிலையில் உள்ளது அருகில் ஸ்கூல் ரேஷன் கடை சுகாதார நிலையம் உள்ளது அங்கன்வாடியில் 20க்கும் மேற்பட்ட பச்சிளம் குழந்தைகள் உள்ளது சுகாதாரமின்றி பழுதடைந்த இந்த அங்கன்வாடி ஏதேனும் அசம்பாவிதம் நடக்கும் முன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற்கு.

# ஆம்ஸ்ட்ராங் வழக்கு: அடுத்த வாரத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் சென்னை மாநகர காவல் ஆணையர்



சென்னை, செப். 8

பகுஜன் சமாஜ் கட்சியின் தமிழ்நாடு மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங், கடந்த ஜூலை 5ம் தேதி படுகொலை செய்யப்பட்டார். இந்த கொலை தொடர்பான வழக்கு விசாரணை தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலைக்கான காரணத்தை விரைவில் தெரிவிப்போம் என்று சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும்அவர்கூறுகையில், "பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் ஒரு வாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். 90 சதவீத விசாரணை முடிவடைந்துவிட்டது. கொலைக்கான காரணம், முக்கிய நபர்கள் குறித்து விரைவில் தெரிவிப்போம். ஆம்ஸ்ட்ராங் வழக்கில் கைதானவர்களின் சொத்துக்களை முடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 3 முக்கிய ரவுடிகள்பிடிபடவில்லை. சம்போ செந்தில் உள்ளிட்டவர்களை தீவிரமாக தேடி வருகிறோம். விரைவில் கைதாவார்கள். ரவுடிகளின் செயல்பாடுகளை கட்டுப்படுத்ததனிப்படை உருவாக்கப்பட்டுள்ளது" என்று மாநகர காவல் ஆணையர் அருண் தெரிவித்தார்.

# மதுரை புத்தக திருவிழாவில் பக்தி பாடலைக் கேட்டு திடீரென சாமி ஆடிய மாணவிகள்

மதுரை,செப்.8

மதுரை மாவட்ட நிர்வாகம் சார்பாக ப.பா.சி. ஒருங்கிணைப்பில் ஆண்டுதோறும் புத்தக திருவிழா சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், நடப்பாண்டிற்கான புத்தக திருவிழா மதுரை தமுக்கம் மைதானத்தில் உள்ள மாநாட்டு மையத்தில் தொடங்குகிறது. தினந்தோறும் மாலை 6.00 மணி முதல் 9.00 மணி வரை புத்தக திருவிழா நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புத்தக திருவிழாவில் தினந்தோறும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்கும் கலை நிகழ்ச்சிகள், பிரபல எழுத்தாளர்கள், பட்டிமன்றப் பேச்சாளர்கள் பங்கேற்கும் சிந்தனை அரங்கம் நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. இந்த நிலையில், இன்று புத்தக திருவிழாவின் தொடக்க நிகழ்ச்சியில் அமைச்சர் மூர்த்தி, மாவட்ட கலெக்டர் சங்கீதா,

மாநகராட்சி ஆணையர் தினேஷ் குமார், மேயர் இந்திராணி ஆகியோர் கலந்து கொண்டனர். தொடக்க விழாவின் ஒரு பகுதியாக, பாரம்பரிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அப்போது பக்தி பாடல்கள் ஒலிபரப்பப்பட்டன. அதைக் கேட்டு புத்தக கண்காட்சிக்கு வந்திருந்த சில மாணவிகள் திடீரென சாமி ஆடத் தொடங்கினர். அதில் சிலர் மயங்கி விழுந்த நிலையில், அங்கிருந்த பொதுமக்கள் அவர்கள் முகத்தில் தண்ணீர் தெளித்து அவர்களை இருக்கையில் அமர வைத்தனர். பின்னர் அந்த மாணவிகளை அழைத்து வந்த ஆசிரியர்கள் அவர்களை அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

# கிருஷ்ணகிரி பள்ளியை நிர்வகிக்க சிறப்பு அதிகாரி தனியார் பள்ளிகள் இயக்குனருக்கு பரிந்துரை



சென்னை, செப். 8

போலி என்.சி.சி. முகாமில் பள்ளி மாணவிகளுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுக்கப்பட்ட சம்பவம் தமிழ்நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த மாதம் 5ம் தேதி முதல் 9ம் தேதி வரை தனியார் பள்ளி ஒன்றில் என்.சி.சி. பயிற்சி முகாம் நடந்தது. இதில் போலி பயிற்சியாளர் சிவராமன் என்பவரால், 13 வயது மாணவி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டார். அந்த பள்ளியில் அந்த பயிற்சிக்கு சென்ற மேலும் 13 மாணவிகள் பாலியல் தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டதாக தகவல் வெளியாகி இருந்தது.

மாணவியின் புகாரை அடுத்து அந்த போலி என்.சி.சி. பயிற்சியாளர் சிவராமன், அவருக்கு உதவியாக இருந்த உதவி பயிற்சியாளர்கள், தனியார் பள்ளியின் முதல்வர், தாளாளர், சக ஆசிரியர்கள் என 11 பேரை போலீசார் கைது செய்தனர்.

இந்த விவகாரத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவின் பேரில் இரு குழுக்கள் உருவாக்கப்பட்டது. குறிப்பாக சிறப்பு புலனாய்வுக் குழு உருவாக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட மாணவிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு உளவியல் ரீதியாக பயிற்சி அளிக்க சமூக நலத்துறை செயலாளர் ஜெயஸ்ரீ முரளிதரன் தலைமையிலான பல்நோக்கு விசாரணைக் குழு உருவாக்கப்பட்டது. இந்த இரு குழுக்களும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த 10 நாட்களாக விசாரணை மற்றும் ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சிவராமன், தற்கொலைக்கு முயன்ற நிலையில், மருத்துவமனையில் சிகிச்சை பலனில்லாமல் உயிரிழந்தார். தொடர்ந்து சிவராமனின் தந்தையும் உயிரிழந்தார்.

இந்த சூழலில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை அளித்தது தொடர்பான வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நடந்து வருகிறது.

இந்த நிலையில் போலி என்.சி.சி முகாம் நடத்திய கிருஷ்ணகிரி தனியார் பள்ளியை நிர்வகிக்க சிறப்பு அதிகாரியை நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என சென்னை ஐகோர்ட்டில்கிருஷ்ணகிரி மாவட்ட கல்வி அதிகாரி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டத்துக்கு புறம்பாக செயல்பட்டதால் சிறப்பு அதிகாரியை நியமிக்க பள்ளி கல்வி இயக்குனருக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது

இதனைத்தொடர்ந்து போலி என்.சி.சி. முகாமில் மாணவிகளுக்கு பாலியல் தொல்லை தந்த வழக்கை சி.பி.ஐ.,க்கு மாற்றக் கோரிய மனு வரும் 12ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இதனிடையே கல்லூரிகளில் மாணவர்களிடம் மன அழுத்தத்தை குறைக்க பிரத்யோக உளவியல் ஆலோசனை மையங்கள் அமைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக சிறப்பு குழு தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# நான் எங்கும் ஓடிய ஒளியவில்லை; நாளை சென்னைக்கு வருகிறேன்: மகா விஷ்ணு விளக்கம்



சென்னை, செப்.8

சென்னை அசோக் நகரில் அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளி உள்ளது. இந்த பள்ளியில் கடந்த சில தினங்களுக்கு முன்பாக ஆன்மீக சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது.மகாவிஷ்ணுஎன்பவர் பேச்சாளராக கலந்து கொண்டு நிகழ்ச்சியை நடத்தினார். மாணவிகள் மத்தியில் பேசிய மகா விஷ்ணு, மூடநம்பிக்கை, பிற்போக்குத்தனமான கருத்துக்களை தெரிவித்தார்.

மாணவிகள் அழகாக இல்லாததற்கு கடந்த பிறவிகளில் செய்த பாவம் தான் காரணம், மாற்றுத்திறனாளிகளாக பிறக்கவும் அதுவே காரணம் என்றும் கூறினார். மறுபிறவி, பாவம், புண்ணியம், பிரபஞ்ச சக்தி பூமியில் இறங்கும் என்றும் கூறினார்.

அப்போது, மூடநம்பிக்கை, பிற்போக்குத்தனமான கருத்துக்களை கூறிய மகா விஷ்ணுவை மாற்றுத்திறனாளி ஆசிரியர் சங்கர் கேள்வி எழுப்பினார். அப்போது, ஆசிரியர் சங்கரை மிரட்டும் வகையில் மகா விஷ்ணு பேசினார். இது தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் வைரலானது.

இச்சம்பவம் தொடர்பாக உரிய விசாரணை நடத்த பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. இதற்கிடையே, மகா விஷ்ணு தலைமறைவு ஆனதாக தகவல் வெளியானது. இந்த நிலையில், வீடியோ வெளியிட்டுள்ள மகா விஷ்ணு, நான் எங்கும் ஓடி ஒளியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மகா விஷ்ணு கூறுகையில், "நாளை மதியம் 1.10க்கு சென்னை விமான நிலையத்தில் வந்திறங்குவேன். அரசு பள்ளியில் உரையாற்றிய பின்னர் நான் ஆஸ்திரேலியாவுக்கு வந்துவிட்டேன். தமிழ்நாடு காவல்துறை, இந்தியாவின் சட்டதிட்டங்கள் மீது மிக அதிக அளவில் நம்பிக்கை வைத்துள்ளேன்.

சென்னை வந்தவுடன் பள்ளிக்கல்வித்துறை அமைச்சரிடம் விளக்கம் அளிக்க உள்ளேன். இறைவனிடம் சரணாகதி அடைந்துவிட்டு உங்கள் அனைவரையும் வந்து சந்திக்க உள்ளேன். நாம் எதற்காக ஓடி ஒளிய வேண்டும்? இது ஓடி ஒளிவதற்கான விஷயமே அல்ல. ஓடி ஒளியக்கூடிய வகையில் என்ன தவறான கருத்தை நான் சொல்லி விட்டேன்? தற்போதைய சூழலில் இந்தியாவில் இருப்பதையே நான் விரும்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

# மன்னிப்பு கோரியதை அடுத்து மத்திய மந்திரி ஷோபா மீதான வழக்கு ரத்து



சென்னை, செப். 8

பெங்களூருவில் உள்ள ராமேஸ்வரம் கபேவில் நடந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் தமிழர்களுக்கு தொடர்பு உள்ளது என மத்திய இணை மந்திரி ஷோபாகரந்தலஜே பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இது தொடர்பாக தி.மு.க. சார்பில் அளிக்கப்பட்ட புகாரின் பேரில், இரு பிரிவினரிடையே கலகலத்தை தூண்டுதல் உள்ளிட்ட 4 பிரிவுகளின் கீழ் ஷோபா கரந்தலஜே மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி ஷோபா சார்பில் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு ஏற்கனவே விசாரணைக்கு வந்தபோது, செய்தியாளர் சந்திப்பு நடத்தி ஷோபா மன்னிப்புக் கோரினால் ஏற்க தயாராக இருப்பதாக அரசு தலைமை வழக்கறிஞர்தெரிவித்திருந்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்த போது, பெங்களூரு குண்டுவெடிப்பு சம்பவத்தில் தமிழர்களை தொடர்புபடுத்தி பேசியதற்காக தமிழ்நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோருவதாக மத்திய இணை மந்திரி ஷோபா சார்பில் பிரமாண பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில், தனது மன்னிப்பை ஏற்றுக் கொண்டு தன் மீதான வழக்கை ரத்து செய்ய வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், மந்திரி ஷோபா கரந்தலஜே மன்னிப்பு கோரியதை அடுத்து அவர் மீதான வழக்கை ரத்து செய்து சென்னை ஐகோர்ட்டு இன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. ஷோபாவின் மன்னிப்பைதமிழ்நாட்டு மக்கள் சார்பாக ஏற்று கொள்வதாக அரசு தலைமை வழக்கறிஞர் தெரிவித்ததை அடுத்து வழக்கு முடித்து வைக்கப்பட்டது.

# ஆவின் நிறுவனத்தில் நடைபெற்ற முறைகேடுகளை அம்பலப்படுத்திய ஊழியர் பணியிடை நீக்கம்: டி.டி.வி. தினகரன் கண்டனம்

சென்னை, செப்.8

அரசு நிர்வாகத்தின் தவறுகளை சுட்டிக்காட்டும் ஊழியர்களின் மீது அடக்குமுறையை கையாளும் தி.மு.க. அரசின் அதிகாரப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது என்று அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

உசிலம்பட்டி தாலுக்கா கோப்பம்பட்டி மொத்த பால் குளிரூட்டும் நிலையத்திலிருந்து மதுரை ஆவின் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட பாலில் தண்ணீர் கலப்படம் செய்ததை வீடியோ எடுத்து வெளியிட்ட ஊழியர் ஒருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆவின் பால் குளிரூட்டும் மையங்களில் நடக்கும் தண்ணீர் கலப்படம் தொடர்பாக எழுந்த புகார்களை விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டிய ஆவின் நிர்வாகம், அதற்கு மாறாக தவறை சுட்டிக்காட்டிய ஊழியர் மீது நடவடிக்கை எடுத்து அடக்குமுறையை கையாண்டிருப்பது கடும் கண்டனத்திற்குரியது.

மதுரை மாவட்டத்தில் உள்ள 686 கிராம அளவிலான கூட்டுறவுச் சங்கங்களுக்கு பால் வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு பாலின் தரம் குறித்தோ, அளவு குறித்தோ உடனடி ஒப்புகைச் சீட்டு வழங்கப்படாமல் இருப்பதற்கும், இதுபோன்ற தண்ணீர் கலப்பட முறைகேடுகளுக்கும் ஆவின் உயர் அதிகாரிகள் உடந்தையாக இருப்பதாக பால் முகவர்கள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

எனவே, ஆவின் நிர்வாகத்தில் நடைபெற்ற முறைகேடுகளை சுட்டிக்காட்டிய ஊழியர் மீதான பணியிடை நீக்க உத்தரவை உடனடியாக திரும்பப்பெறுவதோடு, ஆவின் நிர்வாகத்தில் நடைபெறும் முறைகேடுகளையும் குளறுபடிகளையும் களையத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என முதல்அமைச்சர்மு.க.ஸ்டாலினை வலியுறுத்துகிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு, பூஜை பொருட்கள் விற்பனை அமோகம்

சென்னை, செப். 8

விநாயகர் சதுர்த்தி விழா நாளை (சனிக்கிழமை) கோலகலாமாக கொண்டாடப்பட உள்ளது. இதையொட்டி, விநாயகர் சதுர்த்தி வழிபாட்டுக்கு பயன்படும் வகையில் பூஜைப்பொருட்களை மக்கள் அதிக அளவில் வாங்கிச்சென்றனர். பூ, பொரி, கடலை, சுண்டல் உள்ளிட்டவற்றையும் வாங்க பொதுமக்கள் ஆர்வம் காட்டினர்.

விநாயகர் சதுர்த்தி வழிபாட்டுக்கு பயன்படும் வகையில் சிறிய அளவிலான விநாயகர் சிலைகள் விற்பனையும் தீவிரமாக நடந்தது. மேலும், அபிஷேகத்திற்கு தேவையான சந்தனம், விபூதி, பன்னீர் உள்ளிட்ட பொருட்கள் என, விநாயகர்சதுர்த்திக்கு தேவையான பூஜை பொருட்கள்விற்பனையும் களைகட்டியது.

சென்னை கோயம்பேட்டில் பூஜை பொருட்களை வாங்குவதற்காக ஏராளமான மக்கள் குவிந்தனர். சென்னை மட்டுமின்றி, தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பூஜை பொருட்கள் விற்பனை களை கட்டியது. விநாயகர் சதுர்த்தியையொட்டி, பூக்களின் விலை சற்று அதிகரித்து காணப்பட்டது.

# தெலுங்கில் நடிகராக அறிமுகமாகும் பாலகிருஷ்ணாவின் மகன்




'ஹனுமான்' தெலுங்கு படம் ரூ.40 கோடி பட்ஜெட்டில் உருவாகி ரூ.400 கோடியை வசூலித்தது. இந்தப் படத்தை இயக்கியவர் பிரசாந்த் வர்மா. அவரது அடுத்த படம் 'சிம்பா'. இந்தப் படத்தில் பாலகிருஷ்ணா மகன் மோக்ஷக்னா நடிகராக அறிமுகமாகிறார். ஹனுமான் சினிமாடிக் யுனிவர்ஸின் ஒரு பகுதியாக உருவாகவிருக்கும் இந்தப் படத்தை, லெஜண்ட் புரொடக்ஷன் மற்றும் எஸ்எல்வி சினிமாஸ் தயாரிக்கிறது.

நடிகர் மோக்ஷக்னாவின் பிறந்த நாளை முன்னிட்டு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதனைதனது எக்ஸ்தளபக்கத்தில் பகிர்ந்துள்ள இயக்குநர் பிரசாந்த் வர்மா, "பாலகிருஷ்ணாவின் ஆசியுடன், அவரது மகனை இந்தப் படத்தின் மூலம் அறிமுகப்படுத்துவதில் பெருமை அடைகிறேன்" என தெரிவித்துள்ளார்.

நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், ஆந்திராவின் முதல்வராக இருந்தவர் என்டி ராம ராவ். இவருக்கு 8 மகன்கள். அதில், நந்தமுரி ஹரிகிருஷ்ணா, நந்தமுரி பாலகிருஷ்ணா ஆகிய இருவரும் நடிகர்களாக வலம் வருகின்றனர். நந்தமுரி ஜெயகிருஷ்ணா தயாரிப்பாளராக இருக்கிறார். நந்தமுரி மோகன கிருஷ்ணா ஒளிப்பதிவாளராக சில படங்களில் பணியாற்றியிருக்கிறார். நந்தமுரி ஹரிகிருஷ்ணாவின் மகனான ஜூனியர் என்டிஆர் தெலுங்கில் முன்னணி நடிகராக வலம் வருகிறார்.

# மம்முட்டி பிறந்தநாளையொட்டி புதிய படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியீடு




மம்முட்டி நடிப்பில் கவுதம் மேனன் இயக்கும் புதிய படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர் வெளியானது.

கேரள திரையுலகில் உச்சம் தொட்ட நடிகர்களில் ஒருவராக வலம் வருபவர் நடிகர் மம்முட்டி . இதுவரை ஏராளமான சூப்பர் ஹிட் படங்களை கொடுத்துள்ள இவரது நடிப்பில் தற்போது உருவாக உள்ள திரைபடம் குறித்த முக்கிய அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது. மலையாளத்தில் மம்முட்டி நடிப்பில் அண்மையில் வெளியான டர்போ திரைப்படம் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது.

மம்முட்டியை வைத்து பிரபல இயக்குநரும் நடிகருமான கவுதம் மேனன் படம் இயக்கப் போவதாக திரை வட்டாரங்களில் கிசுகிசுக்க பட்ட நிலையில் கொச்சியில் கடந்த சில நாட்களுக்கு முன் இந்த படத்தின் பூஜை சத்தமின்றி நடைபெற்றது.

கவுதம் மேனன் இயக்கும் முதல் மலையாளப் படமான இப்படத்தை தனது தயாரிப்பு நிறுவனத்தின் மூலம் மம்முட்டியே தயாரிக்க உள்ளார் . இதில் நாயகியாக நயன்தாரா நடிக்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் விநாயகர்சதுர்த்தியான இன்று இந்த படத்தின் பெயரை படக்குழு அறிவித்துள்ளது . அதன்படி ரசிகர்களின் மாபெரும் எதிர்பார்ப்புக்கிடையே உருவாகும் இந்த படத்திற்கு 'Dominic and the Ladies' purse' எனப் பெயரிடப்பட்டுள்ளதாக சிறப்பு போஸ்டர் மூலம் படக்குழு அறிவித்துள்ளது.

இரவு உடையுடன், பெண்கள் உபயோகப்படுத்தும் பர்சை கையில் வைத்துக்கொண்டு போஸ் கொடுக்கிறார் மம்முட்டி. அவரது அறையில் பொருட்கள் ஆங்காங்கே சிதறிக்கிடக்க, பூனை ஒன்றும் அவரை பின் தொடர்கிறது. பெண்ஒருவரின்ஹேண்ட்பேக்திறந்துகிடக்கிறது. பின்னணியில்சிலநபர்களின்புகைப்படங்கள் மார்க் செய்யப்பட்டுள்ளன. அதையொட்டி ஹாலிவுட் பட போஸ்டர்கள் இடம்பெற்றுள்ளன. அதில் ஜேம்ஸ் பாண்ட் '007' பட போஸ்டர் உள்ளது. அதை வைத்து பார்க்கும்போது மம்முட்டி துப்பறிபவராக இருப்பார் என தெரிகிறது. கிரைம் த்ரில்லராக இருக்கும் என்பதை போஸ்டர் உறுதி செய்கிறது.

# 'கங்குவா' ரிலீஸ் எப்போது? படக்குழு வெளியிட்ட அப்டேட்!




நடிகர்சூர்யாநடிப்பில்உருவாகியுள்ளகங்குவாதிரைப்படத்தின் மேல் பெரிய எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. இதன் டிரெய்லர் வெளியாகி கவனம் பெற்றதால், சூர்யா சிவா கூட்டணியில் உருவான கங்குவாவுக்காக ரசிகர்கள் காத்திருக்கின்றனர். இப்படத்தை அக்டோபர் 10ம் தேதி வெளியிடுவதாகத் தயாரிப்பு நிறுவனம் அறிவித்திருந்தது. அதற்காக, இறுதிக்கட்ட பணிகள் தீவிரமாக நடைபெற்று வந்தன. இந்த நிலையில், நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவான வேட்டையன் படமும் அக்டோபர் 10ம் தேதிக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

ரஜினியின் வேட்டையன் திரைப்படமும் அதே தேதியில் வெளியாகஉள்ளதால்'கங்குவா'ரிலீஸ்தேதிதள்ளிப்போவதாகஅறிவிக்கப்பட்டது. இதனால்இணையவாசிகள் விமர்சனங்களை தெரிவித்து வந்தனர்.

நடிகர் சூர்யா "ரஜினிகாந்த் நடித்துள்ள 'வேட்டையன்' படத்திற்காக 'கங்குவா' படத்தின் ரிலீஸ் தள்ளி வைக்கப்படுகிறது. மூத்தவர், சினிமாவின் அடையாளம், 50 ஆண்டுகளாக நடித்து வருகிறார் என்பதால் ரஜினிகாந்த் படத்திற்கு வழிவிடுவோம். 'கங்குவா' ஒரு குழந்தை. அதை நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள். 'கங்குவா' படத்தின் புதிய ரிலீஸ் தேதி விரைவில் அறிவிக்கப்படும்" என்று கூறியுள்ளார்.

இந்நிலையில் தயாரிப்பாளர் தனஞ்செயன் நேர்காணல் ஒன்றில் ' முதலில் அக்டோபர் 10ம் தேதி வெளியாகவிருந்தது. வேட்டையன் திரைப்படமும் அதே நாளில் வரவே ஞானவேல்ராஜா ரஜினி ரசிகர் என்பதால் கங்குவா படத்தை வேறு நாளில் வெளியாக திட்டமிட்டுள்ளார். ஹிந்தியில் மல்டிபிளக்ஸில் கங்குவா வெளியாகவுள்ளது. 3000க்கும் அதிகமான திரைகளில் வெளியாகவிருக்கிறது. வட இந்தியாவில் ஓடிடியில் 8 வாரங்களுக்குப் பிறகே வெளியாகும். தமிழ்ப் படங்கள் இந்த நெறிமுறைகளை ஏற்காததால் மல்டிபிளக்ஸ்தியேட்டர்களில்வெளியாகுவதில்லை. ஆனால், கங்குவாமிகப்பெரியரிலீஸுக்குகாத்திருக்கிறது. இன்னும் 2 மாதங்களில் கங்குவா ரிலீஸ் ஆகும். ஹிந்தியிலும் வெளியாகுவதால் அதற்கும் ஏற்றவாறு ரிலீஸ் தேதியை அமைக்க திட்டமிட்டு வருகிறார்கள்.' என கூறியுள்ளார்.

# 'தேவரா' படத்தின் டிரெய்லர் ரிலீஸ் குறித்த தகவல்




நடிகர் ஜூனியர் என்.டி.ஆரின் 30வது படத்தை இயக்குனர் கொரட்டலா சிவா இயக்குகிறார். இப்படத்துக்கு 'தேவராபாகம்1' என்று பெயரிடப்பட்டுள்ளது. அனிருத் இசையமைக்கும் இந்த படத்தில் பாலிவுட் நடிகை ஜான்வி கபூர் கதாநாயகியாக நடித்துள்ளார்.

மேலும் இந்த படத்தில் சாயிப் அலிகான், பிரகாஷ்ராஜ் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் படப்பிடிப்பு தாய்லாந்து, ஐதராபாத் ஆகிய பகுதிகளில் மிக தீவிரமாக நடைபெற்று வந்த நிலையில் படத்தின் இறுதி கட்ட பணிகளும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

சமீபத்தில், இப்படத்தின் மூன்று பாடல்கள் வெளியாகி ரசிகர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இப்படம் வருகிற 27ந் தேதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது. இந்த நிலையில் இப்படத்தின் டிரெய்லர் ரிலீஸ் தேதி குறித்த தகவல் வெளியாகி உள்ளது.

அதன்படி இப்படத்தின்டிரெய்லர்வருகிற 10ந் தேதி வெளியாக உள்ளது. நடிகர் ஜூனியர் என்.டி.ஆர் விநாயகர்சதுர்த்தியை முன்னிட்டு இது குறித்தபதிவை தனது எக்ஸ் தள பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

# 'கோட்' படத்தின் நீக்கப்பட்ட காட்சிகள் விரைவில் வெளியீடு இயக்குநர் வெங்கட் பிரபு

லியோவுக்குப் பிறகு விஜய் நடிப்பில் பிரம்மாண்டமாக உருவாகியுள்ள திரைப்படம் கோட். வெங்கட் பிரபு இயக்கிய இந்த படத்துக்கு யுவன் சங்கர் ராஜா இசையமைத்திருக்கிறார். இந்தப் படத்தில் விஜய்யுடன் சிநேகா, மீனாட்சி சவுத்ரி, பிரசாந்த், மோகன், பிரபு தேவா, ப்ரேம்ஜி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். மிகுந்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் கோட் படம் உலகம் முழுவதும் செப்டம்பர் 5ம் தேதி 4,000 திரைகளில் வெளியானது. இந்தப் படத்தில் பலர் சிறப்புத் தோற்றங்களில் நடித்துள்ளார்கள். அதில் ஒருவர் சிவகார்த்திகேயன். வளர்ந்துவரும் சிவகார்த்திகேயன் அடுத்து விஜய்யின் இடத்தைப் பிடிப்பார் என பலரும் கூறுகிறார்கள். இந்தக் கருத்தை கோட் படத்தில் உவமையாக வைத்து சில காட்சிகள் உருவாக்கப்பட்டிருந்தன.

இது குறித்து நேர்காணல் ஒன்றில் இது குறித்து வெங்கட் பிரபு கூறியதாவது: 'விஜய்யின் பெருந்தன்மைதொடக்கத்தில் சில வசனங்கள் வேறு மாதிரி இருந்தன. ஆனால், விஜய் சார் கூடுதலாக 'இந்தாங்கா சிவா, இந்தத் துப்பாக்கியைப் பிடிங்க. நிறைய பேரோட உயிர் உங்ககைல இருக்கு..' என்று சொல்லுவார். துப்பாக்கி விஜய் சார் படம். இதைச் சொல்லுவதற்கு எவ்வளவு பெரிய மனசு வேண்டும். 'நீங்க இதைவிட எதோ முக்கியமான வேலையா போறீங்க. நீங்க அதை பார்த்துக்கோங்க. நான் இதை பார்த்துக்குறேன்' என விஜய்யிடம் சிவகார்த்திகேயன் சொல்லுவார். நீக்கப்பட்ட சிவகார்த்திகேயன் காட்சிகள்சிவகார்த்திகேயன் மோகன் காட்சிகள் இருக்கின்றன. அது சுவாரசியமான காட்சிகள். ஆனால், படத்தின் நீளம் கருதி அது படத்தில் நீக்கப்பட்டன. விரைவில் நீக்கப்பட்ட காட்சிகளில் வெளியிடுவேன்' என்றார். மேலும் நீக்கப்பட்ட ஒட்டுமொத்த காட்சிகளும் படத்தில் சேர்க்கப்பட்டு ஓ.டி.டி.யில் வெளியாகும் எனவும் இயக்குநர் வெங்கட் பிரபு தெரிவித்துள்ளார்.

# கேமரூன் கிரீன் அரைசதம்.. ஸ்காட்லாந்தை ஒயிட்வாஷ் செய்த ஆஸ்திரேலியா




ஸ்காட்லாந்து நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் விளையாடியது. இதில் முதல் 2 போட்டிகளின் முடிவிலேயே ஆஸ்திரேலியா தொடரை கைப்பற்றிவிட்டது.

இந்நிலையில் இவ்விரு அணிகளுக்கு இடையிலான 3வது டி20 போட்டி இன்று நடைபெற்றது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஸ்காட்லாந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் அடித்தது. அதிகபட்சமாக பிரண்டன் மெக்முலன் 56 ரன்கள் அடித்தார். ஆஸ்திரேலியா தரப்பில் அதிகபட்சமாக கேமரூன் கிரீன் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 150 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு தொடக்கம் சரியாக அமையவில்லை. பிரெசர் மெகுர்க் டக் அவுட் ஆகியும், டிராவிஸ் ஹெட் 12 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தனர்.

இதனையடுத்து கை கோர்த்த கேப்டன் மிட்செல் மார்ஷ் கேமரூன் கிரீன் ஜோடி சேர்ந்து அணியை வெற்றிப்பாதைக்கு அழைத்து சென்றனர். அதிரடியாக விளையாடிய கேமரூன் கிரீன் அரைசதம் அடித்து அசத்தினார். இதனிடையே மிட்செல் மார்ஷ் 31 ரன்களிலும், டிம் டேவிட் 25 ரன்களிலும் ஆட்டமிழந்தனர்.

இருப்பினும் கிரீன் ஆட்டமிழக்காமல் 62 ரன்கள் குவித்து கடைசி வரை களத்தில் இருந்து அணியை வெற்றி பெற வைத்தார். வெறும் 16.1 ஓவர்களிலேயே 4 விக்கெட்டுகளை மட்டுமே இழந்த ஆஸ்திரேலியா 153 ரன்கள் அடித்து விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டி20 தொடரை ஆஸ்திரேலியா முழுமையாக கைப்பற்றி ஸ்காட்லாந்தை ஒயிட்வாஷ் செய்து அசத்தியுள்ளது.

# இந்தியாவில் பிடித்த மைதானம் எது..? தென் ஆப்பிரிக்க வீரர் பதில்

தென் ஆப்பிரிக்க அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான தப்ரைச்ஸ் ஷம்சியிடம், இந்தியாவில் உள்ள பல மைதானங்களில் உங்களுக்கு மிகவும் பிடித்த மைதானம் எது? என்று ரசிகர் ஒருவர் எக்ஸ் பக்கத்தில் கேள்வி எழுப்பினார்.

அதற்கு சென்னையில் இருக்கும் சேப்பாக்கம் தமக்கு பிடித்த மைதானம் என்று அவர் பதிலளித்துள்ளார்.

இது குறித்து அவர் எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ளது பின்வருமாறு: "சென்னை. அங்குள்ள ரசிகர்கள் உண்மையில் அறிவாளிகள் மற்றும் விளையாட்டின்போது இரு அணியினரின் நல்ல ஆட்டங்களை பார்த்து யார் நன்றாக விளையாடினாலும் அவர்களை பாராட்டுகிறார்கள்" என்று கூறினார்.

# மெக்முல்லன் அரைசதம்.. ஆஸ்திரேலியாவுக்கு சவாலான இலக்கு நிர்ணயித்த ஸ்காட்லாந்து



ஸ்காட்லாந்து ஆஸ்திரேலியா இடையிலான 3வது டி20 போட்டி இன்று நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணியின்கேப்டன்மிட்செல்மார்ஷ்பந்துவீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஸ்காட்லாந்துஅணிக்குபிரண்டன்மெக்முல்லன் தவிரமற்றவீரர்கள்பெரியஅளவில்ஒத்துழைப்பு அளிக்கவில்லை. சிறப்பாக விளையாடிய பிரண்டன் மெக்முல்லன் 56 ரன்கள் அடித்து அசத்தினார். மற்ற வீரர்களில் ஜார்ஜ் முன்சி 25 ரன்கள் அடித்தார்.

இதன் மூலம் ஸ்காட்லாந்து 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் அடித்துள்ளது. ஆஸ்திரேலிய தரப்பில் அதிகபட்சமாக கேமரூன் கிரீன் 3 விக்கெட்டுகள் வீழ்த்தினார்.

இதனையடுத்து 150 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற சவாலான இலக்கை நோக்கி ஆஸ்திரேலியா பேட்டிங் செய்ய உள்ளது.

# கம்பீர் மாதிரி ஒருவரால்தான் எங்களது அணியை காப்பாற்ற முடியும் பாக்.முன்னாள் வீரர்



பாகிஸ்தான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட வங்காளதேச கிரிக்கெட் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. அந்த 2 போட்டிகளிலும் வெற்றி பெற்ற வங்காளதேசம், பாகிஸ்தானை அதன் சொந்த மண்ணில் ஒயிட்வாஷ் செய்து வரலாறு படைத்தது.

ஏற்கனவே கடந்த சில ஆண்டுகளாக பாகிஸ்தான் அணி மோசமான செயல்பாடுகளை வெளிப்படுத்தி வரும் வேளையில் தற்போது வங்காளதேச அணிக்கு எதிராகவும் சொந்த மண்ணில் தோல்வியை தழுவியது அந்நாட்டு ரசிகர்கள் மத்தியில் ஏமாற்றத்தை அளித்துள்ளது.

கடந்த ஒருநாள் உலகக்கோப்பையில் ஆப்கானிஸ்தான் அணியிடம் தோல்வியை தழுவி லீக் சுற்றோடு வெளியேறிய அந்த அணி, டி20 உலகக்கோப்பையிலும் அமெரிக்க அணியிடம் தோல்விகண்டு வெளியேறியது. இதனால் அந்த அணியின் செயல்பாடுகள் பெரிதும் விமர்சனத்திற்கு உள்ளாகி உள்ளன.

இந்நிலையில் பாகிஸ்தான் அணியை வலுப்படுத்த கம்பீர் மாதிரி ஒருவர் தேவை என்று அந்த அணியின் முன்னாள் வீரர் டேனிஷ் கனேரியா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "எல்லாம் ஒரு பொருட்டுக்காகவே பாகிஸ்தான் கிரிக்கெட்டில் செய்யப்படுகிறது. அதுதான் புதிய கேப்டனை உருவாக்குகிறேன் என்றும், கேப்டனை மாற்றுகிறேன் என்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் வீழ்ச்சிக்கு சென்று கொண்டிருக்கிறது. இது எப்பொழுதும் நல்ல பலனை தராது. நீங்கள் உங்களுடைய நிரந்தர கேப்டனுடன் இருக்க வேண்டும். நீங்கள் ஒரு கேப்டனை உருவாக்கி அவரை ஒரு வருடம் சுதந்திரமாக விட்டு கேள்விகள் கேட்க வேண்டும். ஆனால் நீங்கள் அப்படியான எந்த கடினமான முடிவையும் எடுக்க மாட்டீர்கள். நீங்கள் ஒரு வருடத்திற்கு பிறகு கேள்வியும் கேட்பதில்லை, சிறப்பான செயல்பாடு இல்லை என்றால் சரியான முடிவையும் எடுப்பதில்லை.

2024 இந்திய அணியை எடுத்துக் கொள்ளுங்கள் அவர்களுடன் சிறப்பாக இணைந்து பணியாற்றிய ராகுல் டிராவிட் இருந்தார். அடுத்த தற்பொழுது கம்பீர் இருக்கிறார். அவர் அற்புதமான வீரர். அவர் எப்பொழுதும் முன் வைத்த காலை பின் வைப்பதே கிடையாது. தற்பொழுது பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இப்படி கடினமான முடிவுகளை எடுக்கக்கூடிய உறுதியான நபர் தேவை" என்று கூறினார்.

# டிராவிட் கூறிய வார்த்தைகள்தான் தன்னம்பிக்கை கொடுத்தது சஞ்சு சாம்சன்

இந்திய அணியின் தலைமை பயிற்சியாளராக இருந்த ராகுல் டிராவிட்டின் பதவிக்காலம் டி20 உலகக்கோப்பை தொடருடன் முடிவுக்கு வந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்திய அணிக்காக மிகச் சிறப்பான பணியை இவர் செய்து வந்துள்ளார். டிராவிட் தலைமையில் இந்திய அணி மிகச் சிறப்பாக செயல்பட்டு ஐ.சி.சி. தொடர்களில் இறுதிப்போட்டி வரை முன்னேறி இருந்தாலும் கோப்பைகளை வெல்ல முடியவில்லை என்ற குறை நீடித்து வந்தது. அந்த குறையையும் டி20 உலகக்கோப்பையுடன் முடிவுக்கு வந்தது. வெற்றிகரமாக பயிற்சியாளராக தனது பயணத்தை முடித்து இந்திய அணியில் இருந்து வெளியேறி உள்ளார்.

இதனையடுத்து ஐ.பி.எல். தொடரில் ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தலைமை பயிற்சியாளராக தற்போது அவர் பொறுப்பேற்றுள்ளார். இவர் ஏற்கனவே ராஜஸ்தான் அணியின் கேப்டனாகவும், ஆலோசகராகவும் பெரும் பங்காற்றியுள்ளார். இந்நிலையில் 2013ம் ஆண்டு ராகுல் டிராவிட் சொன்ன வார்த்தைகள்தான் தம்மை இந்தளவுக்கு முன்னேற உதவியதாக ராஜஸ்தான் அணியின் தற்போதைய கேப்டன் சஞ்சு சாம்சன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு:"ராஜஸ்தான் அணிக்கு வருவதற்கு சில முன்பாக ஜெய்ப்பூரில் அந்த அணியின் முன்னோட்ட முகாம் நடைபெற்றது. அதற்கு என்னை ஸ்ரீசாந்த் பாய் அழைத்துச் சென்றார். அங்கே ராகுல் சார், பேடி அப்டோன் ஆகியோர் இருந்தனர். அதற்கு முன்பாக நான் கொல்கத்தா அணியின் முன்னோட்ட முகாமிற்கு சென்றேன். அங்கே பெரிய வாய்ப்புகள் கிடைக்காததால் ராஜஸ்தான் அணியில் எனக்கு எதிர்பார்ப்புகள் இல்லாமல் இருந்தது. குறிப்பாக அங்கு என்ன நடக்கும்? எம்மாதிரியான வீரர்களை ராஜஸ்தான் எதிர்பார்க்கிறார்கள் என்பது தெரியாமல் இருந்தது.

அந்த சூழ்நிலையில் ராஜஸ்தான் அணியின் முகாமில் 2 நாட்கள் பங்கேற்றேன். அன்றைய நாளில் என்னுடைய ஆட்டத்தை பார்த்து விட்டு 'நீங்கள் ஏதோ சிறப்பாக செய்கிறீர்கள் எங்களுடைய அணிக்காக விளையாடுகிறீர்களா?' என்று ராகுல் டிராவிட் கூறினார். அவருடைய வார்த்தைகள் எனக்கு பெரிய தன்னம்பிக்கையை கொடுத்தது. ஏனெனில் அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் விளையாடிய அவர் லெஜெண்ட். அவரைப் போன்ற ஒருவர் ராஜஸ்தான் அணியில் விளையாடுவதற்கு போதுமானதாக இருக்கிறேன் என்று சொன்னால் கண்டிப்பாக நான் போதுமானதாக இருப்பேன்" எனக் கூறினார்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.